ஓம்

# சென்னை மாகாண

# மூன்றாவது தமிழர் மகாநாடு,

## திருச்சி



திறப்பாளர்

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.

26-12-1937.

ஓம்

# சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மகாநாடு, திருச்சி.

நாள் து 1937 டிசம்பர் 26-ஆம் நாள்

திருவாளர்

**கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்** எம். ஏ., எம். எல்.,

நிகழ்த்திய

# திறப்புரை

---

தமிழன்பர்களே,

தமிழர் என்பார் தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள் ஆவர். தமிழ் நாட்டிற் பிறந்தும் தமிழைத் தாய்மொழியெனக் கருதாதவர் தமிழராகார். தமிழ் நாட்டிற் பிறவாதிருந்தும் தமிழைத் தாய்மொழி போற் போற்றுபவரைத் தமிழர் என்பது இழுக்காகாது. தமிழ் நாகரிகத்தை உயர்ந்ததெனக் கருதுபவருந் தமிழரே. தமிழ் நாட்டிலே தமிழிலேயே இறைவனை வாழ்த்தி வழிபடல் வேண்டும்; தமிழிலேயே சமயச் சடங்குகள் யாவும் நடைபெறல் வேண்டும்; தமிழிலேயே அரசியல் நிகழ்ச்சிகள் எழுதப்பெறல் வேண்டும்; தமிழிலேயே எக் கலைகளையும் கற்பித்தல் வேண்டும்; தமிழிலுள்ள அறிவுக் களஞ்சியங்களைப் பாதுகாத்தல் வேண்டும்; தமிழ் நாட்டில் தமிழ்மொழி ஒன்றே கட்டாயமொழிப் பாடமாக இருத்தல் வேண்டும். என்ற கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகுபவரே உண்மைத் தமிழராவர். உண்மைத் தமிழர் ஒருங்கு வீற்றிருந்து தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கம் நாடும் பேரவை தமிழர் மகாநாடு எனப் பெயர் பெறும். இத் தமிழ்ப் பேரவையிற் புகுவோர் நினைவில் வைத்தற்குரிய சிலவற்றை இங்கே குறிப்பிடக் கருதுகின்றேன்.

தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்வதில் உண்மையாக உழைப்பவர்களுள் சாதி சமயம் பற்றிய பிளவுகள் கருதப்படமாட்டா. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறித்தவர், மகமதியர், ஐரோப்பியர் முதலிய யாவரும் தமிழன்னைக்குத் தொண்டுசெய்வதில் ஒன்று சேரலாம். பல்வேறு வகையாகப் பிரிந்துநிற்குந் தமிழர் யாவரையும் ஒற்றுமைப் படுத்துதற்குரிய சிறந்த கருவி தமிழ்மொழிப்பற்று ஒன்றேயாகும். தாய்மொழிப் பற்றில்லாத தாய்நாட்டுப் பற்று உயிரில்லாத உடம்பு போல்வதாகும்.

தமிழ் அறநூல் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" எனவும், தமிழ்ச் சமயநூல் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனவும், பழந்தமிழ்ப்பனுவல் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனவும் முழங்குங்காலை தமிழ்மக்களைச் சாதியால் வேறுசெய்து, சமயத்தால் மாறுசெய்து, மொழியினாற் கூறுசெய்து அவர்களுக்குள் ஒற்றுமைக் கேடுண்டாக்கியது யாது? மரத்தின் அடியில் யாவருங் கலந்து முதல்வனைத் தொழுத தமிழர்பால் வருணம்பற்றிக் கோயில் புகுதல் கூடாது என்ற கோட்பாடு எப்படி நுழைந்தது? தொடுக்குங் கடவுட் பழம் பாடற் றொடையின் பயனும் பரமற்கு மிடுக்குமிகுந்த உரை கொண்டு நிகழ்த்தும் பூசனை எவ்வாறு உவப்பாயிற்று? நிறைமொழி மாந்தர் மறைமொழி நடுவிற் பிறமொழி மந்திரப் பெருமை புகுந்ததேன்? மலையிலும் கடலிலும் காட்டிலும் நாட்டிலும் பாலை வனத்திலும், பாமரமக்களும் பண்பாய் ஒலித்த யாழும் குழலும் செய்தியறைந்த பறையும் எங்கே போயின? இசைக்குரியது ஏனையர் மொழியெனும் வசைக்கருத்து யாங்ஙனம் வந்தது? பன்னிரு முறையிலும், நாலாயிரப் பனுவலிலும் பயின்ற இன்னிசைப் பண்ணும் திறனும் பரந்து நிலவாமைக்குக் காரணம் யாது? ஓவியக் கலைக்கும், உயரிய சிற்பத்திற்கும் உரிய தமிழ் நூல்கள் எங்கே ஒளித்தன? சித்தர் மருத்துவம், சிறந்த வாதநூல், வானூல், கற்பநூல், யோகத் தமிழ் நூல், அறிவர் ஞானநூல் என்பன மாசுபடிந்து மங்கிக் கிடத்தற்கு மந்திரம் செய்தார் யார்? தமிழர் தம் சமய நிலையங்களிலும், அற நிலையங்களிலும் மூடபத்தி தலையெடுப்ப முதன்மையான அறிவைக் கொன்றது யாது? என்பனவைபோன்ற வினாக்கட்குத் தக்க விடை தேட வேண்டும். தேடுமிடத்து, கல்லாமையாலும், நூல் காவாமையாலும், கற்றோரைப் பேணாமையாலும் தமிழினத்தார் தாழ்நிலையடைந்து எதிரிகளின் சொல்லம்பிற்கு இரையாகிப் பொய்ச் சொற் பொலிவென்னும் சரட்டினாற் பிணிக்கப்பட்டு 'மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே! பொய் போலும்மே!! பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே! மெய்போலும்மே!!' என்ற முதுமொழிக்குத் தக்க எடுத்துக்காட்டாக இலங்குதலை தெளிவாகத் தெரியவரும். ஆரியர்க்கு நாகரிகத்தைக் கொடுத்து அவரது ஆடம்பர மொழிகளைத் தாங்கள் பெற்று அம்மொழியைத் தாமும் அவரும் பொதுமொழியாகக் கருதித் தம்முடைய கருத்துக்களை அதுவாயிலாக விளக்கவே மொழியுங் கருத்தும் ஆரியருடையனவே என்ற தப்புக்கொள்கை தலையெடுக்கலாயிற்று. இந்நாட் பத்தை ஆய்ந்தறிந்த டாக்டர் கில்பேர்ட் சிலேட்டர் (Gilbert Slater) 'While the Aryans were dravidised in Culture, the Dravidians were aryanised in language' என்று சுருக்கமாகவும் அழகாகவுங் கூறினர்.

'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' எனச் சேக்கிழார் பெருமான் அருளிய வண்ணமும்; 'சதுர்மறை ஆரியம் வருமுன் சக-

முழுதும் நினதாயின் முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே' என்று காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் மொழிந்த வண்ணமும் ஒரு காலத்தில் உலக மெங்கும் தமிழ்மொழியானது பரவியிருந்தபோது மதியிற்களங்கம் போல அதன் பகுதி ஒன்றில் ஆரியங் கிளைப்பதாயிற்று. அதை மொழிநூலாராய்வார் நன்கறிவார். அதனை இங்கு விரிப்பின் பெருகும். நம்மளவில் பார்க்கும்பொழுது இந்திய நாடு முழுவதிலும் குமரி முனைக்குத் தெற்கேயும் தமிழானது பதினாயிரம் ஆண்டுகட்குமுன் பரவிச் செழித்தோங்கிற்று. வடமேற்கு இந்தியாவில் ஆரியம் தோன்றுமுன்பே செந்தமிழ் நாகரிகமும் செம்பொருள் வழிபாடும் நாடெங்கும் சிறப்புற்று விளங்கின. அவற்றின் பழமையைக் குறித்து 51 ஆண்டுகட்கு முன்னேயே காலஞ்சென்ற சென்னைக் கவர்னர் கனம் கிராண்ட் டப் (Grant-Duff) ஆய்ந்துரைத்த அமுதமொழி தமிழ் நாடெங்குந் தங்க எழுத்தில் பொறிக்கத்தக்கது.

Their institutions......... go back to a period as compared with which the hoariest Indo-Aryan Antiquity is as the news in Reuters' latest telegram.

இறந்தாரை எழுப்பும் மந்திரம் வல்லராயத தண்டமிழர் இலங்கினர் என்பது இருக்கு வேதத்தால் குறிக்கப்பட்ட தொன்றாகும். நெருப்புக் கடவுளை வழிபட்ட ஆரியக் குருக்கள் சிலர் முதன்முதல் வடநாட்டில் வாழ்ந்த தமிழ் மன்னன் ஒருவன்பால் உயர்ஞானம் கற்றனர் என்பது உபநிடத ஆராய்ச்சியால் புலனாகும். எல்லைகடந்த செல்வச் செருக்கில் திளைத்த தமிழர் அறம் பொருள் இன்பம் வீடு கூறும் மறைநூல் மறந்தனர். அகத்தியர் முதலிய ஐம்முனிவர் உணர்த்திய அருள்நூல் என்னும் ஆகமம் இழந்தனர். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரையாம் என்பதுபோல ஆரியர் வேதமும் தந்திரமும் தலைநூல்களாயின. தம் வரலாற்றினை அறவே மறந்த ஆதித்தமிழர் ஆரியர் சூழ்ச்சியால் சொல்வலைக்குள் அகப்பட்டனர். ஆரியச்சொல்லம்பால் தாக்கப்பட்டுத் தாய்மொழி பேசும் நாடு குறுகப்பெற்றுக் கிளைமொழியாகிய கன்னடம், தெலுங்கு முதலியவற்றை இழந்து வடவேங்கடம் குமரிக்குள் ஒடுங்கிக் கோயிலிலும் வீதியிலும் வீட்டிலும் ஆற்றிலும் எவ்விடத்தும் ஆரிய மொழிக்கும் அம்மொழித் தலைவர்க்கும் அடிமையாயினர். பண்டைத் தமிழ்ப் பனுவல்களும் பாங்கிற்சிறந்த வரலாறுகளும் பதுங்கிக்கிடப்ப, ஆரியக் கலைகளும் காவியங்களும் ஆடல்களும் பாடல்களும் யாண்டும் பரவித் தாண்டவமாடலாயின. இங்ஙனம் விளைந்த குறைகள் பலப்பல. அவையாவற்றாலும் ஊனம்பெறாது தனது உண்மையியல்பின் செம்மையினால், பழையவற்றுள் பழையதாயும் புதியவற்றுள் புதியதாயும் மூவாது சாவாது என்றும் உயிர்வாழும் தண்டமிழ் அன்னை இன்னும் உயிரோடு வாழ்ந்து வீற்றிருப்பதைக் கண்டு பொறாமைகொண்ட பகைச் சொல்லினர் ஆரியம் முதலிய மொழி

போற் றமிழ்மொழியையும் இறந்தமொழியாக்குங் கருத்துடன் அவள் மக்களின் அறியாமையைக் கருவியாகக் கொண்டு, அவள் இன்னுயிரைச் செகுத்து விடலாமென்று துணிந்துகொண்டு இற்றைக் காலத்தில் முன்வந்திருக்கின்றனர். இந்தி என்னும் குளிர்செந்தீயை அவள் இனிய உடம்பில் சிறிது சிறிதாக நுழைத்துவிடலாமென்று கருது கின்றார்கள். இந்தி வளர இடம் பெறுமாயின், இன்னுஞ் சில ஆண்டுகளில் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் தமிழ் மணம் அறவே யொழிந்து பள்ளிப்புத்தகம், பத்திரிகை யுலகம், சினிமாக் காதை, சிறந்த நூல்கள், செவ்விய பாடல், அரசியல நிகழ்ச்சி, ஆல யப் பூசனை, அகத்திற் பேசும் உறவினர் மொழி ஆயவெல்லாம் இந்தி மயமாய்த் தமிழர் நாடும் இந்திநாடாகவே இந்தியநாடும் நடுவெழுத் தாய உயிரினை இழக்கும். உலக சரித்திரம் ஊனம் எய்தும். தமிழர் நாகரிகமே இந்திய நாகரிக உயிரெனும் நுட்பம் ஒழிந்திடலாகும். தமிழர்க்கு இகழ்ச்சியும் கேடும் இதனின் வேறேது?

இப்பேரிடையூற்றை நீக்குதற்குத் தமிழ்மக்கள் கண் விழித் துக் கடமையாற்றுஞ் சமயமிதுவே. கடமையை நிறைவேற்றுதற்கு உண்மைத் தமிழர் உடல் பொருள் ஆவி மூன்றும் அர்ப்பணம் செய் தற்குப் பிற்படலாகாது. மிகுதியால் மிக்கவை செய்வாரைத் தகுதி யால் தாக்கித் தலைகுனியச் செய்யாவிடில் தமிழர் என்னும் பெயர்க்குத் தமிழ் நாட்டினர் தகுதியிலார் என்பதே முடியும். தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப் பாடமாக ஆக்குவதை எதிர்த்தவர்கள் பலர், இப் போது இந்தியை வற்புறுத்தக் கங்கணங்கட்டி நிற்கின்றார்கள். இனி வரும் எவ்வகைத் தேர்தல்களிலும அத்தகையார்க்கு முன்னேற்றங் கிட்டுமாயின் 'அறிவிலி' என்ற சொல் தமிழர்க்கே வாய்ப்புடைத்தாகும்.

தமிழரின் பெருங்குறை யாதெனின், தயவினால் தலைக்கேடு தேடிக்கொளல். அவர்கள் தம் உரிமையைப் போற்றுதலைத் தங்கலந் தேடும் தாழ்வென்று நினைத்துத் தாழ்வடைபவர். வீரமாய் எதனையுந் தொடங்கி விடாமுயற்சி யின்மையால் மோசம் போவார். தந்நூல் பேணாது பிறநூல் கற்பவர். உலகம் புகழும் தலைசான்ற கல்விகற்பார் சிலர். அவர் சொற் கேளார் பலர். சுற்றத்துட் குற்றம் காண்பார், இனத்தார் பசித்திருப்ப அயலார்க்கு வயிறார அமுதிடுவர். தமிழ்ச் செல்வர் பலர் எதிரியின் முகமன் வலையில் அகப்பட்டுப் பெருமை பிதற்றி உரிமை இழப்பர்.

இத்தகைய குறைகளை எதிரிகள் நன்கறிவர். அன்னோர் சொல் நலங்காட்டிப் பொருட் பழம்பறிப்பார்; மாணவராய் நின்று ஆணவ ராய் ஆசிரியராய் ஆட்சிபுரிவார். தமிழரைப் பிரித்தாளும் பெற்றியில் இணையற்ற திறமை சான்றவர். எதிர்த்தாற் பதுங்கி அற்றம் பார்த் துத் தங் கருத்தை மெல்லெலன நுழைத்து இடைவிடா முயற்சியால் நாளடைவில் தமது வெற்றி நாட்டுவர். இநநுடபங்களைத் தமிழ் மகா

நாட்டுத் தலையறிஞர் தங்கடமை நிறைவேற்றுமிடத்து மனதில் பதி வித்துக் கொள்ளல் வேண்டும்.

இனிச் செய்யற்பாலன சில தொகுத்துரைப்பாம். தமிழன்னை யின் பெருமையைத் தமிழ்மக்கள் யாவரும் தெளளத்தெளிய உணரும் படி பததிரிகையும் பிரசாரமும் ஓய்விலலாமல் நடைபெற வேண்டும். தமிழின் ஏற்றத்தை உணமையாகக் கருதும் எவரையும் நம்மவ ராகவே தழுவிககொள்ளுதல் வேண்டும். தமிழுக்கு உழைக்கும் அறிஞர்க்கு நேரும் இன்னல்களை முறபடடு அகற்றல் வேண்டும். தமிழுக்கு நேராகவோ மறைவாகவோ ஊறுசெய்யும் பத்திரிகைகளை ஆதரியா தொழித்தல் வேண்டும். போதுமான மொழிப்பற்று இல் லாத தமிழ்ச் செல்வர்களின் ஆதரவைககொண்டு பகைப் பத்திரிகைகள பெருமிதமுற்று பெருநடை நடந்து பெருநதீங்கு விளைககின்றன. அவர்கள் சூழ்ச்சியினின்று நம்மை விடுதலை செய்யும் வீரப் பத்திரி கைகளை வேரூனறச் செய்தல் வேண்டும்.

சிறந்த தமிழ் நூல்களுக்குத் தமிழ்மாண்பு விளககும் ஆராய்ச்சி முறையில் உரைகண்டு வெளிப்படுத்துவதற்குப் பெருந்துணை புரி தல் வேண்டும். தமிழ் நாகரிகத்திற்குக கணணடியாய் அமைந்த தொல்காப்பியத்திற்கு ஏறபட்டிருக்கும் உரைகள அது தோன்றிச் சில்லாயிரம் ஆண்டுகள் கழிநதபின் வடநூல் ஒளியினில வகுக்கப் பட்டனவாகும. உரைகேறப நூற்பாக்கள் புகுத்தப்பட்டும் திருத் தப்படடும் வைப்புமுறை மாற்றப்பட்டும் இருப்பதை ஆராய்ச்சி யாளர் அறிவர். அவ்வுரைகொண்டு நூல்கறபவர் கலப்பற்ற உண்மை யைக் காண இயலாதவரே யாவர். அவ்வாறே திருவள்ளுவர் நூலுக் கும் தமிழ்நலங்காட்டும் புத்துரை இனியே அமையவேண்டும். பரிமே லழகர் உரையில் கொள்ளத்தக்கன பல உள. எனினும் அதன் நிறம் தமிழ்நிறமன்று. வள்ளுவர் கூறிய பொதுஅறத்தை ஒரு குலத்துக் கொருநீதி கூறும் மனு முதலிய நூல்களிற் காண்கவென்று அது கற் பிககின்றது. பெண்கல்வி வேண்டாமென்று பேசுகின்றது. அரசி யற் கொள்கைக்கு ஆரிய நூலில் ஆதாரம் தேடுகின்றது. காமத்துப் பாலும் வடவர்வழித் தெண்கின்றது. அதனால் தமிழரது பண்டைப் பொதுநெறி மறைவுற்று வருணக்கொள்கை மதிப்புறுவதாயிற்று. சங்க நூல்களுக்கும் தமிழர் மனப்பான்மையைத் தெள்ளிதின் உரைக் கும் தெளிவுரைகள் ஏறபடல்வேண்டும். தண்டமிழ்க காப்பிய நலங் களைக் கவினுற விளக்கும் நற்றமிழ வாசகநூல்கள் நவநவமாக நனி பரவுதல் வேண்டும். புராணப் பனுவல்கள் ஆராயச்சியில் புடைக்கப் படுதல் வேண்டும். மெய்யாராய்ச்சியில் நிலைபெறுவனவே தழுவத் தக்கன. ஏனைய தள்ளத்தக்கன. சரித்திரம் செம்மை பெறுதல் வேண்டும். தமிழின் விழுமிய கருத்தும் நூலும் ஆங்கில முதலிய பிறமொழி தம்மினும் பிறங்குதல் வேண்டும். சித்தர் நூலாராயச்சி செவ்விதிற்றிகழ்ந்து மருத்துவ சோதிட மந்திர யோகநூல் முறை

கலைத் துறைமுறை விளக்குந் தெளிவு நூல்கள் பலப்பல ஆதல்வேண்டும். மேனாட்டு அறிவியல் நூல்கள் பலவும் தமிழிற் பாங்குற அமைத்தல் ஆங்கிலங் கற்றவர் முதற்கடமையாகும். நயமிக்க வடநூல் பிற நூல்கள் தமிழிற் கொணர்தல் அவ்வம் மொழியில் வல்லுநர் கடமை. செந்தமிழிசைகளே தமிழ் நன்மக்களால் போற்றத் தக்கன. இசைவல்ல தமிழர் இன்றமிழ்ப்பாட்டே பாடுதல் வேண்டும். இசைத்தமிழ் முழக்கம் தமிழ்மக்கள் யாவர் வீட்டிலும் நிறைதல் வேண்டும். நாடகக் கலைகள் தமிழர் சீரை நாடுதல் வேண்டும். பண்டைத் தமிழர் வாழ்க்கைச் சிறப்பும் ஆடல்பாடல் கூடல் வனப்பும் இன்பம் வீரம் முதல் எண்வகைச் சுவையும் நாடகமேடையிலும், பேசும்படச்சாலைகளிலும் பொங்கித் ததும்பிப் பூரணமாதல் வேண்டும். ஓவியமும் சிற்பமும் ஒண்டமிழ்முறையில் அமைதல் வேண்டும். அவற்றை விளக்கும் நூல்கள் தமிழின்கண்ணே மிகுதல் வேண்டும். தமிழ் கல்லாத தமிழரும் தமிழ் நூலில்லா வீடும் தமிழகத் திருத்தல் கூடாது. சுருங்கக்கூறின் தமிழ் தமிழ் என்ற முழக்கம் நாடெங்கும் செழித்தல் வேண்டும்.

தமிழ்மொழி பேணுந் தகுதியில்லார்க்கு அரசியல் அதிகாரம் கிட்டுதலாகாது. பல்கலைக் கழகங்களிலும் அவர்களுக்கு ஆதிக்கம் இருத்தல் கூடாது. எவ்வகைப் பொதுநிலையங்களிலும் அவர்களுக்கு மதிப்பு ஏற்படுதல் கூடாது. இது பாமரர் மனத்திலும் பண்டிதர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோற் பதிதல் வேண்டும். தாய்மொழிப் பகைவர்க்கு உரிமைச்சீட்டு உதவி உயர்வுகொடுத்தல் தமிழன்னைக்குச் செய்யும் நன்றியில் பெருங் கேடாகும். தமிழ்நலம் நாடும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்க்கே மதிப்பும் மாண்பும் அரசியலாற்றலும் கல்லூரித்தலைமையும் திண்ணமாக அமைதல் வேண்டும். தமிழ்ப் பொதுமக்கள் கண்ணுங்கருத்துமாகத் தமிழ்த்தொண்டர்க்கே எவ்வகை உரிமைச்சீட்டையும் உதவுதல் வேண்டும். அங்ஙனம் உதவத் தவறுதல் மன்னிக்கத்தகாத பெருங்குற்றமாகும். இக் கருத்தினைத் தமிழர் என்பார் யாவருள்ளத்தும் நிலைபெற்றுப் பயனுறச் செய்தல் தமிழர் மகாநாட்டின் தலைக்கடமையாகும்.

தமிழுக்குழைத்து உயிரை அளித்த தமிழ்ப்பெரியார் திருநாள் எங்கும் என்றும் கொண்டாடப்படுதல் வேண்டும். தமிழர் வீடு தோறும் தமிழ்ப் பெரியார் திருவுருப்படங்கள் திகழ்தல் வேண்டும். அவர் திருநாள் கொண்டாடாது பிறநாட்டுத் தலைவர் திருநாள்மாத்திரமே கொண்டாடுதல் தமிழரின் உணர்ச்சியின்மையைக் காட்டும் இழிசெயலாகும். எந்நாட்டுப் பெரியாரினும் நம்நாட்டுப் பெரியார் கழிபெருஞ்சிறப்புடையா ரென்பதைக் கருதுதல வேண்டும். அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர், திருமூலர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கப்புலவர்கள், பிற்காலப் பெரும் புலவர்கள், அருள் வள்ளல்கள் முதலியோர்க்கு ஈடாகப் பிறநாட்டுப் பெரியாரைக் கூறு

தல் ஒண்ணுமோ! தமிழ்ப் பெரியார்க்குத் தனிச்சிறப்புச் செய்து பிறபெரியாரையும் பேணுதல் நன்றே.

தமிழரது மொழிமாண்புடனே பிற மாண்பினையும் தமிழர் மகாநாடு நாடுதல்வேண்டும். தமிழரின் சமுதாய ஒற்றுமைப் பொருட்டு, நாகரிகத்திற்கு மாறில்லாமல், பல இனத்தாரும் உடன் உண்ணுதல், மகட் கோடல், மகற் கோடல் என்பனவற்றை யாரும் மறுத்துரைத்தல் கூடாது. அவ்வாறே ஒரு கடவுளுண்மை, உயிர்க் கிரங்குதல், மறுபிறப்பு, உருவழிபாடு, ஒழுங்காசியல் என்பவற்றை யும் பொதுக் கூட்டங்களில் மறுத்தலின்மை ஒற்றுமைக்கு ஊஞ்செய் யும். தமிழரின் பொருள் வசதியின் பொருட்டுப் பாங்கு முதலியன நடத்தல், தங்கிடம், உணவு வசதியின் பொருட்டு மாணவர் விடுதி பொது விடுதிகள் அமைத்தல், சமய முன்னேற்றத்திற்காகத் திருத் தப் பிரசாரம் பயிற்றுதல், தொழில் வளர்ச்சிக்காகக் கல்லூரிகள், கழகங்கள் நிறுவுதல், வேறெவ்வகை வளர்ச்சிக்கும் உரிய திட்டங்கள் வகுத்தல், முதலியன படிப்படியாக, ஆட்சிக்கு வருதல் வேண்டும். கல்வித்துறை, செல்வத்துறை, தொழிற்றுறை, அரசியற்றுறை, சம யத்துறை முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழர் ஒற்றுமையுற்றுப் பெருநலம் பெறுதற்கு ஆவனயாவும் ஆற்றுதல் கடனே. தமிழர்க்கு மாகாணம் தனியே அமைதல் நன்மைகள் பலவற்றிற்கும் அடிப்படை யாகும். யாவற்றிற்கும் அடிப்படை மொழிபேணுதலே, ஆதலின் அதனை விரித்திங் குரைத்தாம். உலகமுழுவதும் ஒரு குடைக் கீழாண்ட உயர் தமிழ் மொழிக்கே இந்திய நாடு முற்றிலும் உரியது. நேற்றுத் தோன்றிய வரம்பிலா மொழிகள் தமிழ்க்கு முன்னர்த் தலை யெடுக்காமல் அடங்கிச்செல்லப் பணித்தல் வேண்டும். அன்னையை மீறும் அகந்தை மொழிகளை அகற்றி ஒழித்தலே அறிஞர் கடமை. போலிப்பற்றை ஒழித்து நடுநிலை நின்று பொதுநலம் நாடின் இந்தி மொழியினும், எங்கும் பரவிய ஆரிய மொழியாம் ஆங்கிலமொழியே பொது மொழியாக அமைதற்பாலது. ஆயிரத்திலொரு தமிழன் வடநாடு சென்றால் செல்லுங்காலை வேண்டுமாயின் இந்தி கற்க. அதற்காகத் தாய்க்கொலை செய்தல் சால்புடைத்தன்று. இந்தக் கருத்தை எல்லாத் தமிழரும் கடைப்பிடித்தல் ஆகிய ஒரு பெருங் கடமை முற்றிலும் நிறைவேறின், இடையூறு யாவையும் எளிதில் விலக்கி அழியாப்பேரறிவும் அந்தமில் இன்பமும் எந்நாளும் தமிழர் பெறுவர். ஆதலின் இப் பெருங் கடமையும் பிற எப்பெருங் கடமை யும் இறைவன் அருள்கொண்டு செவ்விதின் இயற்றுவான் தமிழர் இயக்கம் தழைத்தல் வேண்டும். தமிழர் இயக்கம் நீடூழி நிலவ, இத் தமிழர் மகாநாடு திறப்புற்றுச் சிறப்புற்றோங்குக.

---

The Jupiter Press, Madras.